**வேலூர் மாவட்டம்**
**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி**
**கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்**
**ந.க..எண். 773/கதமே/2021, நாள். .07.2022**

பொருள் : ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம் – பள்ளிகளில் உள்ள பள்ளி மேலாண்மைக் குழு வங்கிக் கணக்கு – வட்டார வளமையங்களில் உள்ள வங்கி கணக்குகளில் உள்ள தொகைகளை திரும்ப செலுத்துதல் மற்றும் வங்கிக் கணக்குகளை முடிவு செய்தல் (Closure) – சார்பு.

பார்வை : சென்னை–6, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, மாநிலத் திட்ட இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.1702/F1/SS/2022, நாள்.30.06.2022.

*********

வேலூர் மாவட்டம், அனைத்து தொடக்க/நடுநிலை/உயர்நிலை/மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது. பார்வையில் கண்ட மாநிலத் திட்ட இயக்குநர் (ஒபக) அவர்களின் கடிதத்தில் தெரிவித்தபடி, 2022–23–ம் ஆண்டு முதல் SNA (Single Nodal Account) மூலமாக மட்டுமே பணப்பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி பள்ளிகளில் செயல்பட்டு வரும் பள்ளி மேலாண்மைக்குழு வங்கிக் கணக்குகள், வட்டார வளமையங்களில் செயல்பட்டு வரும் வங்கிக் கணக்குகள் மற்றும் மாவட்ட அளவிலான வங்கிக் கணக்குகளில் உள்ள வட்டித் தொகை மற்றும் செலவிடப்படாத அனைத்து தொகையினையும் உடனடியாக மாநிலத் திட்ட இயக்குநரக வங்கிக் கணக்கிற்கு செலுத்திட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி அனைத்து அரசு பள்ளிகளிலும் உள்ள பள்ளி மேலாண்மைக் குழு வங்கிக் கணக்குகளில் உள்ள தொகையினை வட்டார வளமைய வங்கிக் கணக்கில் 02.07.2022–க்குள் திரும்ப செலுத்தி அதற்கான விவரங்கள் சம்பந்தப்பட்ட தலைமையாசிரியரால் வட்டார வளமைய மேற்பார்வையாளரிடம் கடிதம் வாயிலாக வழங்கப்பட வேண்டும். துப்புரவு பணியாளர்களுக்கான (Scavengers Wagers) ஊதியம் பெறும் வங்கிக் கணக்குகள் உள்ள பள்ளிகள் மட்டும் துப்புரவு பணியாளர்களின் ஊதியத் தொகையினை தவிர்த்து மற்ற எல்லா தொகையினையும் வட்டார வளமைய வங்கிக் கணக்கில் **RTGS/NEFT மூலம் மட்டுமே** திரும்ப செலுத்திட வேண்டும். மேலும் வங்கிக் கணக்குகள் முற்றிலுமாக முடிவு (Closure) செய்யப்பட வேண்டும்.

மேலும் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி நிதியிலிருந்து விடுவிக்கப்பட்ட தொகை ஏதும் பள்ளி வங்கிக் கணக்கில் இருப்புத் தொகை ஏதுமில்லை என்று தலைமையாசிரியர்களால் இரு நகல்களில் சான்றளிக்கப்பட வேண்டும்.

ஒவ்வொரு வட்டார வளமையங்களும் பள்ளிகளிலிருந்து தொகைகள் திரும்ப பெற்றவுடன் வட்டார வளமைய கணக்கிலுள்ள வட்டி மற்றும் செலவிடப்படாத அனைத்து தொகையினையும் சேர்த்து (Schools and Blocks) கீழ்கண்ட DPC வங்கிக் கணக்கில் 02.07.2022–க்குள் **RTGS/NEFT மூலம் மட்டுமே** திரும்ப செலுத்தி பள்ளிகளிலிருந்து பெறப்பட்ட தொகை விவரங்கள் மற்றும் வட்டார வளமையங்களிலுள்ள தொகைக்கான விவரங்கள் தனித்தனியாக கடிதம் மூலமாக மாவட்டத் திட்ட அலுவலகத்தில் 04.07.2022–க்குள் சமர்பித்திட வேண்டும். மேலும் வட்டார வளமைய மேற்பார்வையாளர்களும் (பொ) அனைத்து தொடக்க/நடுநிலை/உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களிடமிருந்து தொகை ஏதும் இல்லை எனச் சான்று பெறப்பட்டுள்ளது என்றும் வட்டார வளமையத்தில் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி நிதியிலிருந்து விடுவிக்கப்பட்ட தொகை இருப்பு ஏதும் இல்லை என சான்றளிக்கப்பட வேண்டும்.

மேற்கண்ட பணியினை மாவட்டக் கல்வி அலுவலர், உதவித் திட்ட அலுவலர் மற்றும் அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள் அனைவரும் இணைந்து செயல்பட்டு குறித்த தேதியில் பணியினை முடித்திட அறிவுறுத்தப்படுகிறது.

| | |
|---|---|
| DPC வங்கிக் கணக்கு | **SSA Vellore EPF, Additional CEO (SSA), Bank – Canara Bank, Branch – Vellore Main, IFSC : CNRB0001129, Ac/Number : 1129101043937** |

2/07/22

**கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர்,**
**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,**
**வேலூர் மாவட்டம்.**

பெறுநர் – 1. அனைத்து தொடக்க/நடுநிலை/உயர்நிலை/மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள்.
2. வட்டாரக் கல்வி அலுவலர்கள், வேலூர் மாவட்டம்.
3. மேற்பார்வையாளர்கள் (பொ), வேலூர் மாவட்டம்.

நகல் – 1. முதன்மைக் கல்வி அலுவலர், வேலூர் – அவர்களுக்கு கனிவுடன் அனுப்பலாகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர், வேலூர்.

F:\00 ESTABLISHMENT\SSA Proceeding 121218.doc